# SHRI KRISHNA ACADEMY

NEET,JEE AND BOARD EXAM COACHING CENTRE
SBM SCHOOL CAMPUS,TRICHY MAIN ROAD,NAMAKKAL
CELL:99655-31727, 94432-31727

வகுப்பு : 12 - பொதுத்தமிழ் மதிப்பெண்கள் : 50
நாள் : 31/05/21 காலம் : 1.30

## ஆயத்தத் தேர்வு – 3

| வி.எண் | | விடை - TENTATIVE ANSWER KEY | மதிப்பெண் | |
|---|---|---|---|---|
| | I பலவுள் தெரிக | | 10x1=10 | |
| 1 | ஈ. | 2,3,4,1 | 1 | |
| 2 | அ | அய்யப்பமாதவன் | 1 | |
| 3 | இ | இராமன், சுக்ரீவன் | 1 | |
| 4 | ஈ. | தீயினைத்தார் | 1 | |
| 5 | இ | ஈ.ழுபோதல், கெளவியிலே | 1 | |
| 6 | இ | நடிகர் திலகம் - உத்தம சோழன் | 1 | 10 |
| 7 | ஆ | திருமணமும், குடும்பமும் | 1 | |
| 8 | இ | கடுக்காய் | 1 | |
| 9 | இ | ஹிராக்ளிட்டஸ் | 1 | |
| 10 | இ | தொல்காப்பியம் | 1 | |


Scanned with CamScanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

II - எவையேனும் ஐந்தனுக்கு விடையளி 5×2=10

11. முருகன் சோறு உண்டு பால் பருகினான்.

12. கல்வி என்பது அதன் உரிமையாளரை அவர் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவரைப் பின் தொடர்ந்து வரும் ஒரு செல்வம்.

13. விண்மீன் ஒளிர்ந்தது. எரிநட்சத்திரம் விழுந்தது.

14. நேற்று முதல் அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

15. i] பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.
ii] பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கினர்.

16. மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்பு கொள்ள வேண்டும்

17. ஆசிரியரின் வழிகாட்டுதலில் செல்லாத மாணவர்கள் அச்சாணி இல்லாத தேர் போல துன்புறுவர்.



Scanned with CamScanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## III.எவையேனும் இரண்டனுக்கு 2×6=12

18. தமிழின் சிரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

- ❖ சூரியன் மாலை நேரத்தில் மேற்கு மலையில் தலையைச் சாய்ப்பான்.
- ❖ அப்போது செந்நிற ஒளி பட்டு வானம் எல்லாம் சிவந்த பூக்களைக் கொண்ட பூக்காடு போல காட்சியளிக்கும்.
- ❖ அதுபோல, உழைப்பாளர்களின் கைகளும் சிவந்து காணப்படும்.
- ❖ தோள்கள் விம்மி வியர்வை வெள்ளம் முத்து முத்தாகக் காட்சியளிக்கும்.
- ❖ சங்கத்தில் கொலுவிலிருந்த தமிழன்னை, மூண்டு வரும் கவிதை வெறிக்கு உணவாவாள்.
- ❖ மீண்டுமந்தப் பழமை நலம் பெறுவதற்குச் சிங்கம்போலச் சிலிர்த்தெழுந்து குளிர்பொதிகைச் செந்தமிழே சீறி வா, வா! என்று கவிஞர் சிற்பி வியந்து பாடுகிறார்.

---

### நெடுவினா- விடை (6 மதிப்பெண்)

19. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

முன்னுரை:

- ❖ கம்பர், தன் காவியத்தில் இராமனைப் பண்பின் படிமமாகப் படைத்துள்ளார். இராமன், அனைத்து உயிர்களிடத்தும் எல்லையற்ற அன்பு கொண்டவனாகத் திகழ்கிறான். இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையை இங்குக் காண்போம்.

வேடுவர் தலைவனுடன் கொண்ட உறவு:

- ❖ வேடுவர் தலைவன் குகன். இராமன், கங்கையைக் கடக்க குகன் உதவுகிறார். குகன், இராமனிடம் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தான். இராமன் இளவரசனாக இருந்தாலும், வேடனான குகனைத் தன் உடன்பிறப்பாக ஏற்றுக்கொண்டு தன் உயிருக்கு இணையானவன் என்கிறான்.

சடாயுவைத் தந்தையாக ஏற்றல்:

- ❖ இராவணன் சீதையைச் சிறையெடுத்துச் செல்லும்போது சடாயு என்னும் கழுகு வேந்தன் இராவணனைத் தடுத்துச் சண்டையிட்டான். சண்டையில் காயம்பட்டு சடாயு இறந்து போகிறான். சடாயு, இராமனின் தந்தையான தசரதனின் நண்பன். எனவே, இராமன் சடாயுவைத் தன் தந்தையாக எண்ணி, மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச்சடங்குகளைச் செய்கிறான்.

சவரியைத் தாயாக ஏற்றல்:

- ❖ இராமனிடம் மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டிருந்தவள், சவரி. இராமன் சீதையைத் தேடிச் சென்ற போது, சுக்ரீவனுடன் நட்புக் கொள்ள செய்தவள். இராமன், சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான். சவரி இராமனுக்கும் இலக்குவனுக்கும் விருந்தளித்து வழியனுப்பினாள்.

இராமனும் சுக்ரீவனும்:

- ❖ சீதையைத் தேடிவரும் இராமன், கிட்கிந்தையில் வானரத்தலைவன் சுக்ரீவனைக் காண்கிறான். சுக்ரீவன், சீதையை மீட்டுவருவதற்குப் பெரும் உதவி செய்கிறான். இராமன், சுக்ரீவனைத் தன் உயிர் நண்பனாக ஏற்றுக்கொள்கிறான். மேலும், "என் சுற்றம் உன் சுற்றம்", "நீ என் இன் உயிர்த் துணைவன்" என்று இராமன் சுக்ரீவனிடம் கூறினான்.

வீடணனை உடன்பிறந்தவனாகக் கொளல்:

- ❖ இராவணனின் தம்பி வீடணன். சீதையைக் கவர்ந்தது தவறு என்று வீடணன் இராவணனிடம் கூறுகின்றான். இராவணன், வீடணன் பேச்சைக் கேட்க மறுத்துவிடுகிறான். வீடணன், இராமனிடம் வந்து அடைக்கலம் அடைந்தான். இராமன் அவனைத் தன் உடன்பிறந்தவனாக ஏற்றுக் கொண்டான். இராமன், வீடணனிடம் அகன் அமர் காதல் ஐய நின்னொடும் எழுவர் ஆனோம் என்று கூறினான்.

முடிவுரை:

இராமன் சிறந்த நண்பனாக, மகனாக, சகோதரனாகப் படைக்கப்பட்டுள்ளான். மனிதர்களிடம் மற்றுமின்றி, அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாராட்டினான். எனவே, இராமன் பண்பின் படிமமாக விளங்குகின்றான்.

### நெடுவினா – விடை (6 மதிப்பெண்கள்)

20. "எச்.ஏ.கிருட்டிணனார் கிறித்துவக் கம்பரே" என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

- ❖ கம்பர், திருத்தக்கத் தேவரைப் பின்பற்றி விருத்தப்பாவில் இராமாயணம் பாடினார். இவ்வகையில் எச்.ஏ.கிருட்டிணனார், கம்பரை அடியொற்றி விருத்தப்பாக்கள் வாயிலாக இயேசு பெருமானின் வாழ்வைக் காவியமாக்கினார்.
- ❖ கம்பராமாயணம் போன்றே, இரட்சணிய யாத்திரிகத்தைப் பெருங்காப்பியமாய் இயற்றியுள்ளார்.
- ❖ இந்நூலின் செய்யுள் நடையானது, கம்பராமாயணச் செய்யுள் நடையையும், அதன் அமைப்பையும் அதிகம் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது.
- ❖ கம்பர், வடமொழிக் காப்பியமான இராமாயணத்தைத் தமிழ் மரபுக்கு ஏற்பத் தமிழில் பாடிப் பெருமைப்படுத்தினார். எச்.ஏ.கிருட்டிணனார் ஆங்கில நூலைத் தழுவி, இயேசு பெருமானின் வாழ்வைத் தமிழில் இரட்சணிய யாத்திரிகம் எனப் படைத்தார்.
- ❖ கம்பரின் பாடல்களைப் போல கிருட்டிணனாரின் பாடல்களும் எளிதில் கற்கும் வகையில் பாடப்பட்டுள்ளன.
- ❖ பல இடங்களில் கிருட்டிணனாரின் கற்பனை, கம்பரையே நமக்கு நினைவூட்டுகிறது.
- ❖ எனவே இவரின் கவிதை நயம், கவிதை நடை ஆகியவற்றை அறிந்த தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் மனம் திறந்து இவரைக் "கிறித்துவக் கம்பர்" எனப் பாராட்டி மகிழ்ந்தனர்.

Scanned with CamScanner

# IV. அனைத்து வினாக்களுக்கு விடையளி 2×6=12

## நெடுவினா ( 6 மதிப்பெண்கள் )

21 பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகள் தொகுத்து எழுதுக.

- பண்டைக் காலத்தில் ஆசிரியருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது.
- ஊர்தோறும் பொதுவான இடத்தில் உள்ள மரத்தடியே பள்ளியானது.
- பெற்றோர்கள் குழந்தைகளை ஐந்து வயதில் ஆசிரியரிடம் ஒப்படைக்கும் நாள் விசேஷ நாளாக கொண்டாடப்படும்.
- ஆசிரியர் சொல்ல மாணவர்கள் பலரும் சேர்ந்து சொல்வதற்கு 'முறை வைப்பது' என்று பெயராகும்.
- சுவடிகளில் உள்ள எழுத்துகள் தெளிவாகத் தெரிய வசம்பு, மஞ்சள், மணத்தக்காளி இலைச்சாறு, ஊமத்தை இலைச்சாறு மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி ஆகியவற்றைத் தடவுவார்கள்.
- பிள்ளைகள் முதலில் மணலில் எழுதினார்கள்.
- நிகண்டு, நன்னூல், காரிகை, நீதிநூல்கள் எல்லாம் மனனமாக இருக்கும்.
- வாதம் புரிதல் பள்ளிகூடங்களில் இருந்தது.
- அயல்நாடு சென்றும் கற்றார்கள்.
- கொடிய தண்டனைகள் இன்றி அன்பினால் நெறிப்படுத்தினர்.

(அல்லது)

---

## நெடுவினா – விடை (6 மதிப்பெண்கள்)

திருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

- மனித இனம் தோன்றியபோதே மேலாண்மையும் துளிர்க்கத் தொடங்கி விட்டது, புராதன மனிதரிடம் குருத்துவிட்ட தலைமைப் பண்பும் வழிநடத்தும் இயல்புகளுமே அவனை இயற்கையோடு இியையவும் இடர்களைத் தாண்டி நீடிக்கவும் உதவின.

நிருவாக மேலாண்மை

- உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை.
- ஆனால் யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக் கொண்டால் போதும்.
- தெரிந்திருப்பது ஒருவகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் என்று தெரிந்திருப்பது மற்றோர் அறிவு.
- கல்வி கற்காதவராயினும் கற்றோரைச் சேர்ந்து அவர்போல நடந்தால் நல்ல அறிவானது உண்டாகும் என்று நாலடியார் கூறுகிறது.
- நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும்.
- வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்பவன், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான்.
- எனவே தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு நிருவாக மேலாண்மை கட்டாயம் தேவை.

www.Padasalai.Net

Scanned with CamScanner

## நெடுவினா (6 மதிப்பெண்கள்)

22. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

**மொழிப்பற்று:**

- தமிழ், தமிழ், தமிழ் - என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க.
- ஆனால் புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் தமிழில் ஏறிக்கொண்டே போகவேண்டும்.
- தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக. அந்தத் தமிழ் பள்ளிக்கூடங்களில் நவீன கலைகள் எல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்று குறிப்பிடுகிறார்.

**சமூகப்பற்று:**

- நம்மிலும் மெலியாருக்கு நாம் இறங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிட வேண்டுமென்று பாடுபடுதலே நாம் வலிமை பெறுவதற்கு வழியாகும் வேறு வழியில்லை.
- தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க என்று எழுது.
- ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்ற எழுது. அவை ஒன்றில் ஒன்று தாழ்வில்லை என்று எழுது.
- பெண்ணைத் தாழ்மை செய்தோம் கண்ணைக் குத்திக் கொண்டான் என்று எழுது. பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெழுது.
- தொழில்கள், தொழில்கள், தொழில்கள் என்று கூவு. வியாபாரம் வளர்க, எந்திரங்கள் பெருகுக கலைகள் மலிந்துடுக என்று முழங்கு. இவ்வாறு பாரதி குறிப்பிடுகிறார்.

---

(அல்லது) **நெடுவினா – விடை (6 மதிப்பெண்கள்)**

. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

- ஊழித்தாண்டவமாடும் ருத்ரன், கவச குண்டலம் கொடுத்த கர்ணன் காளமேகத்தில் கவிதை ததும்பச் செய்த கவிகுலகுரு காளிதாசன்.
- அமிழ்தத் தமிழ்மொழியின் உன்னதக் கவியான பாரதி, தாய்த்தமிழ் மண்ணின் வீரத்தையும் கம்பீரத்தையும் கொட்டி முழக்கிய வீரபாண்டிய கட்டபொம்மன், சோழ குலோத்துங்கச் சூரியனான ராஜராஜசோழன் எனச் சிவாஜி கணேசன் ஏற்ற கதாபாத்திரங்கள் அனைத்தினாலும் மக்களின் மன அடுக்குகளில் நீங்கா இடம் பிடித்தவர்.
- சிவாஜி கணேசனின் புருவங்களையும், கண்களையும் முக அபிநயங்களையும், உதடுகளையும், கைவிரல்களையும் தாள, லய அபிநயங்களையும் சலனங்களையும் கண்டவர் வியப்பது கண்கூடு.
- சத்ரபதி சிவாஜி, நாடகத்தில் நடித்ததால் பெற்ற பெயர் - சிவாஜி, 'பராசக்தியின்' வெற்றி அவரைத் திரைப்படத் துறையின் 'உச்சாணிக் கொம்பில்' மலரச்செய்து அழகு பார்த்தது.
- 'வீரபாண்டிய கட்டபொம்மன்' என்ற திரைப்படம் சிவாஜி கணேசனை உலகப் புகழ் பெற்ற நடிகனாக மாற்றியது.
- நீ ஏர் பிடித்தாயா? களை வெட்டினாயா? கஞ்சிக்கலயம் சுமந்தாயா? அங்கு கொஞ்சி விளையாடும் எங்கள் குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துக் கொடுத்தாயா? நீ என்ன எனக்கு மாமனா? மச்சானா? மானங்கெட்டவனே.
- தென்னிந்திய நடிப்புச் சக்கரவர்த்தி, தமிழ்நாட்டின் நாட்டியப் பெருமையின் புகழ் கொடி, நடிகர் திலகம்.
- ஏற்ற பாத்திரமாகவே மாறி, நடிப்புக்கு இலக்கணம் வகுத்த சிவாஜிக்கு 'நடிகர் திலகம்' என்ற பட்டம் பொருத்தமானதே.

Scanned with CamScanner

V. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2 = 6

23. புறநானூறு

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;
- பிசிராந்தையார்

பா வகை: நேரிசை ஆசிரியப்பா

24 அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்

www.Padasalai.Net

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஆயத்தத் தேர்வு - 3
12 ஆம் வகுப்பு
நேரம்: 1.30 பொதுத்தமிழ் மதிப்பெண்கள்: 50

## I. பலவுள் தெரிக ( அனைத்திற்கும் விடையளி )

1. பொருத்துக 1 0x 1 = 10

அ.தமிழ் அழகியல் - 1.பரலி.சு.நெல்லையப்பர்
ஆ.நிலவுப்பூ - 2.தி.சு.நடராசன்
இ.கிடை - 3.சிற்பி பாலசுப்ரமணியம்
ஈ.உய்யும் வழி - 4. கி.ராஜநாராயணன்

அ.4,3,2,1 ஆ.1,4,2,3 இ.2,4,1,3 ஈ.2,3,4,1

2."இன்று" என்ற கவிதைக் குறும்படத்தை இயக்கியவர்

அ.அய்யப்பமாதவன் ஆ.அழகிய பெரியவன் இ.சுந்தர ராமசாமி ஈ.சக்தி சிதம்பரம்

3. உவா உறவந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?

அ.சடாயு, இராமன் ஆ.இராமன், குகன் இ.இராமன், சுக்ரீவன் ஈ.இராமன், சவரி

4. அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?

அ.வாள்போல் பகைவர் ஆ.மெய்ப்பொருள்
இ.எண்ணியாங்கு எய்துபவர் ஈ.தீயினத்தார்

5. "அருங்கானம்" என்னும் சொல்லுக்குரிய புணர்ச்சி விதி

அ.ஈறுபோதல், முன்னின்றமெய்திரிதல் ஆ.உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
இ .ஈறுபோதல்., இனமிகல் ஈ.உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

6.தவறானதைத் தேர்க

அ.உரிமைத் தாகம் - பூமணி
ஆ.கோடை மழை - சாந்தாதத்
இ.நடிகர் திலகம் - உத்தம சோழன்
ஈ.தம்பி நெல்லையப்பருக்கு - பாரதியார்

7.சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை

அ.அறவோர், துறவோர் ஆ.திருமணமும், குடும்பமும்
இ.மன்றங்களும் அவைகளும் ஈ.நிதியமும், சுங்கமும்

8. சுவடியோடு பொருந்தாத ஒன்று

அ.வசம்பு ஆ.மணத்தக்காளியிலைச் சாறு இ.கடுக்காய் ஈ.மாவிலைக்கரி

9. "இரண்டு முறை ஒருவன் ஒரே நதியில் இறங்க முடியாது" எனக் கூறியவர்

அ.சாக்ரடீஸ் ஆ.தாலமி இ.ஹிராக்ளிடஸ் ஈ.கலிலியோ

10. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அ.றிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்

அ.நன்னூல் ஆ.அகத்தியம் இ.தொல்காப்பியம் ஈ.இலக்கண விளக்கம்

## II.எவையேனும் ஐந்தனுக்கு விடையளி 5 x 2 = 10

11. தொடரில் உள்ள மரபுப்பிழையை எழுதுக

முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்

12. தமிழாக்கம் தருக

Learning is a treasure that will follow its owner every where.

Scanned with CamScanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

13. கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.
விண்மீன், ஒளிர், எரி, விழு
14. அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.
நேற்று முதல் .................... (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
15. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க
பலகை
16. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக்கொள்ள வேண்டும்.
17. உவமைத் தொடரைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக
அச்சாணி இல்லாத தேர்போல

**III. எவையேனும் இரண்டனுக்கு விடையளி** **2 x 6 = 12**

18. தமிழின் சீரிளமைத்திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
19. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.
20. எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை "கிறித்துவக் கம்பரே" என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

**IV. அனைத்திற்கும் விடையளி** **2 x 6 = 12**

21. பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

**(அல்லது)**

நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

22. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க?

**(அல்லது)**

மகா நடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

**V. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4+2 = 6**

23. "காய்நெல் அறுத்து" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை எழுதுக.

24. " அரண்" என முடியும் குறளை எழுதுக.

Scanned with CamScanner
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# SHRI KRISHNA ACADEMY

Wearehappytoinformyouthat Shri Krishna Academy is ready to offer a sound package of study guidance for the students to excel in Public Examination. We have been contributing our service in Namakkal for the past 20 years in various disciplines like BOARD EXAMINATIONS & NEET / JEE, and other competitive examinations with strenuous faculties.

- **QUESTION PAPERS:**
  (Based on New syllabus, New Text book 2019-2020
  - Knowledge
  - Understanding
  - Application
  - Skill
- **FULL TEST QUESTION PAPERS:**
  CREATIVE QUESTIONS, ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILABLE FOR ALL SUBJECTS.
- **MATERIALS:**
  STUDY MATERIALS AVAILABLE :
  KG, V-VIII, X,XI,&XII (FOR ALL SUBJECTS) TOPPERS GUIDE (FOR ALL SUBJECTS)
- **MINIMUM MATERIALS FOR LATE BLOOMERS**
  X,XI,&XII (FOR ALL SUBJECTS)
- **NEET MATERIALS WITH SOLUTION BASED ON NCERT SYLLABUS**
  STUDY MATERIALS AVAILABLE FOR BOTH TAMIL & ENGLISH MEDIUM
  17 YEARS MODEL QUESTION PAPERS
  NEET COACHING FACULTIES –25 YEARS EXPERIENCED GOVT STAFF

In this proposal, we have given you an outline of all service providing by Shri Krishna Academy. Hope we will get a favourable reply from your institution.

Thanking you.

For MORE DETAILS - 99655 31727


www.Padasalai.Net

Scanned with CamScanner